# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. C.C. No. 50/2019**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-1, L.W- 1 |
| Name | : Kogulnath | Defence | : |
| Father Name | : Kannan | Court | : |
| Village | :Theevu Street, Neppathur | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 30/2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.10.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கட்டிட பொறியியாளராக பணிசெய்து வருகிறேன். வழக்கின் எதிரியை சம்பவத்தன்று நான் நேரில் பார்த்தேன் அவர் பெயர் ராஜா . நான் வீட்டில் இருந்த போது சுமார் 6.30 மணியளவில் எனக்கு தொலைப்பேசி மூலம் தொடர்பபு கொண்டு எனது அப்பா விபத்துகுள்ளான விபரம் சொன்னார்கள். உடனடியாக நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். கடந்த 22.10.2016-ம் தேதி மாலை 6 மணிக்கு என் அப்பாவும், என் அப்பாவின் நண்பர் முருகன் என்பவரும் மங்கைமடம் கடைத்தெருவிற்கு அவரது TVS XL TN 51 AY 0187 என்ற வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி டீசல் மற்றும் காய்கறி வாங்கிக்கொண்டு திருநகரி ரோட்டில் வந்துக்கொண்டிருந்தபோது ஆர். கே.பி சேம்பர் அருகே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த எதிரி ராஜா என்பவர் Hero Honda இருச்சக்கர வாகனத்தில் வந்த நபர், 2 கிலோமீட்டருக்கு முன்பாகவே மதுப்போதையில் வேகமாக வாகனத்தை ஓட்டியதால் அவரை மடக்கி பிடித்து எச்சரித்து அனுப்பியுள்ளார்கள் அதன்பின்னிட்டு அவர் வாகனத்தை அதிகவேகமாக ஓட்டி வடக்கே செல்ல வேண்டியவர் தெற்கு நோக்கி சென்று என் அப்பா ஓட்டி வந்த இருச்சக்கர வாகனத்தில் மோதி என் அப்பாவிற்கு வலது கால், கை மற்றும் உடம்பில் இரத்த காயம் ஏற்பட்டது. என் அப்பாவின் பின்புறம் அமர்ந்திருந்த

முருகனுக்கு தலையில் இரத்த காயம் ஏற்பட்டிருந்தது. மேற்படி இருவரையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவெண்காடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்., இருவரையும் மேல் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் எடுத்து சென்றபோது முருகன் போகும் வழியிலேயே இறந்துவிட்டார். புகாரை திருவெண்காடு அரசு மருத்துவமனையில் வைத்து நான் சொல்ல போலிசார் எழுதிக்கொடுத்தார்கள். வழக்கின் எதிரி பெயர் சம்பவ இடத்தில் உள்ள நபர்கள் சொல்லிதான் எனக்கு தெரியும். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனுவில் உள்ள விவரம் எனக்கு தெரியும்,. **அந்த புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி ஆஜர் இல்லை, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.